DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THENI
C.C.No.111/17

Deposition of Witness: PW 1

| | |
|---|---|
| Name கோவிந்தராஜ் | Father's Name |
| Village | Taluk |
| Caste | Calling |
| Religion | Age |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 26.07.2022

அரசு தரப்பில் முதல் விசாரணை

நான் அல்லிநகரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் பார்பர் கடை வைத்து வேலை செய்துவருகிறேன். லோகநாதன் மற்றும் அவரின் மகன் மீது நான் புகார் கொடுத்தேன். 11.1.17 ல் மேற்படி இருவரும் என்னை அசிங்கமான வார்த்தைகளால் பேசி என்னை அடித்துவிட்டார்கள். அதில் எனக்கு இடது கையில் காயம்பட்டு கை உடைந்துவிட்டது. அதனால் எனக்கு என்னால் வேலை செய்யமுடியாமல் போய்விட்டது. அதில் நான் மயக்கமடைந்துவிட்டேன். என்னை 108 ஆம்புலன்ஸில் மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். அங்கு வைத்து போலிசார் என்னை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்றார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். நான் கொடுத்த புகார் வாக்குமூலம் அசாஆ 1. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யபடவில்லை.